**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண்: 42 /2020** வா.சா.1

2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் :அப்துல் மஜீது தந்தை/கணவர் பெயர்: முத்தலிப்**

---

**18.03.2025 :<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. இவ்வழக்கை பி.வாதிகள் எங்கள் சொத்தில் பிரச்சனை செய்ததால் தாக்கல்செய்துள்ளோம். தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத பொது சொத்து என்றால் சரியல்ல. சொத்து பிரிக்கப்பட்டு மூவருக்கு தனித்தனி பட்டா ஏற்பட்டுவிட்டது. தாவா சொத்து ஒரே சேகரமாக உள்ளது. பி.வாதிகள் தாவா சொத்தான உட்பிரிவு செய்யப்பட்ட சொத்தில் பிரச்சனை செய்தார் என்று பிராதுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்துக்கு அருகில் பி.வாதிக்கு சொத்து உள்ளது. எனது சொத்தில் தென்னை, மாமரங்கள் வைத்து விவசாயம் செய்து வருகிறோம். பி.வாதிகள் மற்றும் மற்ற விவசாயிகள் தாவா சொத்தை கடந்து விவசாயம் செய்ய போக பாதை உள்ளது என்றால் எனது சொத்து வழியாக பாதை இல்லை. வேறு பாதை உள்ளது. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனது பிராதுவில் பி.வாதி தென்னை, மாமரங்கள் சேதப்படுத்த முயல்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. சேதப்படுத்த முயல்கிறார் என்று புழுதிப்பட்டி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. பி.வாதி தான் புகார் கொடுத்தார். நான் பிராதுவில் மேற்படி விபரத்தை சொல்லவில்லை. நான் புழுதிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றாலும் எவ்வித முகாந்திரம் இல்லை என்று எங்களை பேசி அனுப்பினார்கள் என்றால் இல்லை. சர்வே எண். 268/3பி பி.வாதி முகமது கனி 03.06.2011ல் வாதியின் சிறிய தகப்பனாரிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கிரைய விபரத்தை பிராதுவில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

2. மேற்படி சர்வே எண் 268/3பில் கண்ட சொத்தை எனது அப்பா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கிரைய விபரத்தை பிராதுவில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. மேற்படி தாவா சொத்தை இப்ராகிம்-யிடமிருந்து கிரையம் பெற்றோம் என்றால் இல்லை. எங்கள் இருவருக்கும் கூட்டு பாதை சொந்தமானது. நாங்கள் இருவரும் பாதைக்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். மேற்படி ஒப்பந்தம் வண்டிப்பாதை ஒப்பந்தம் என்றால் சரிதான். வண்டி பாதையில் பி.வாதி பிரசுவிக்கக்கூடாது என்பதற்காக பாதையில் மரங்கள், கற்கள் போட்டு அடைத்துள்ளோம் என்றால் சரிதான். பி.வாதிக்கு மேற்படி பாதையில் உரிமையில்லை. தென்வடல் வண்டிப்பாதையை சேதப்படுத்தியது சம்பந்தமாக புழுதிப்பட்டி காவல்நிலையத்தில் கு.எண். 46/2018 வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். மற்ற பங்காளிகளும் இவ்வழக்கு விசாரணையை நடத்தலாம் மனு

தாக்கல் செய்துள்ளோம். நான் தான் பி.வாதிகளுக்கும், மற்ற விவசாயிகளுக்கும் வண்டிப்பாதையில் நடந்து போகக்கூடாது என்று பிரச்சனை செய்து இடைஞ்சல் செய்து இதெல்லாம் மறைத்து பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.